# திராவிடத்தால் வாழ்கிறோம்

1061

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## இது பெரியார் மண்

ர.பிரகாசு

41

பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.

# பெரியார் வரலாற்றில் மைல்கல் ‘நயினார்பாளையம்’!



அண்டிரன் – இந்திரா சுயமரியாதைத் திருமணத்தை பெரியார் தலைமையேற்று நடத்தி வைத்தபோது...

திராவிட இயக்கத்திற்கு எண்ணற்ற கொள்கையாளர்களை, லட்சியவாதிகளைத் தந்த இடம் சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகம். அதில் வெளிச்சம் பெறாமல் போன திராவிடத் தளபதிகளும் எண்ணற்றோர். அவர்களில் ஒருவர் நயினார்பாளையம் அண்டிரன். கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலத்தில் இருந்து 8 கி.மீ தொலைவில் உள்ள ஒரு சிறு கிராமம் நயினார்பாளையம். அங்கிருந்து பச்சையாபிள்ளை என்ற இயற் பெயருடன் அண்ணாமலை பல்கலைக் கழகத்திற்கு புலவர் பட்டம் படிக்கச் சென்றவர், கூடவே பெரியாரையும் கற்கும் வாய்ப்பு உருவானது. தீவிர, சிவ பக்தரான அவர், கல்லூரி முடித்து வெளியே வரும்போது சீரிய பகுத்தறிவாளராக, தமிழ்ப் பற்றாளராக உருவானர்.

கல்லூரி முடித்து வெளியே வந்ததும், அடுத்த ஆண்டே இந்தி எதிர்ப்புப் போராட்டக்களம் சூடுபிடிக்க, ஆதரவாளர்களைத் திரட்டி, போராட்டத்தில் ஈடுபட்டார். நயினார்பாளையம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் பகுத்தறிவுப் பிரச்சாரங்களில் ஈடுபடுவது, பெரியார் கொள்கைகளைப் பரப்புவது, தமிழுணர்வை ஊட்டுவது என 1960-களில் அப்பகுதியில் தீவிரமான பெரியாரிய செயற்பாட்டாளராக மாறினார் அண்டிரன். அவருடன் தமிழ்வாணன், அரண முறுவல், ஹசன், அங்கமுத்து உள்ளிட்ட நண்பர்கள் சிலரும் இணைந்து அப்பகுதியில் தீவிரமாகச் செயல்பட்டனர். இதில் அரணமுறுவல் பின்னாளில் மிகப் பெரும் தமிழறிஞராகவும், உலகத் தமிழ்க் கழகத் தலைவராகவும் திகழ்ந்தவர்.

1973-இல் தந்தை பெரியாரை அழைத்து, தனது திருமணத்தை சுயமரியாதை – சாதி மறுப்புத் திருமணமாக நடத்தினார் அண்டிரன். தன்னோடு பயணித்த ஹசனுக்கு, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே, அதாவது, 1971-இல் பெரியாரை நயினார்பாளையத்திற்கே அழைத்து வந்து சுயமரியாதைத் திருமணம் செய்துவைக்க காரணமாக இருந்தார். ஹசன் திருமணம் குறித்த செய்தி அப்போது விடுதலையில் முதல் பக்கத்திலேயே வெளியானது. காரணம், 1928-ஆம் ஆண்டு முதல் பெரியார் சுயமரியாதைத் திருமணங்களை நடத்தி வந்திருந்தாலும், ஹசனின் திருமணம் சற்றே தனித்துவமானது. மணமகன், மணமகள் இருவரும் இஸ்லாமியராக இருந்து, பெரியார் நடத்திவைத்த முதல் சுயமரியாதை – சடங்கு மறுப்புத் திருமணமாக ஹசனின் திருமணம் இருந்தது. ‘‘என்னுடைய வரலாற்றில் இஸ்லாமியர் குடும்பத்தில் ஒரு முழுமையான சுயமரியாதைத் திருமணத்தை நடத்தி வைப்பது இதுவே முதல்முறை” என விடுதலையில் குறிப்பிட்டார் பெரியார்.

பெரியாரின் இறுதிக்காலத்தில் இப்படியொரு திருமணத்தை நடத்திவைக்கும் வாய்ப்பை வழங்கி, வரலாற்றுப் புகழ்பெற்றது நயினார்பாளையம்.

கொரோனா காலத்தில் அண்டிரன் மறைந் திருந்தாலும், அந்த நயினார் பாளையத்தின் நாயகராக இன்றும் அண்டிரன் திகழ்கிறார். அவருடைய பிறந்த நாள், நினைவுநாளை அங்குள்ள மக்கள் மறவாமல் அனுசரிக்கின்றனர். நயினார் பாளையத்தில் மட்டுமல்ல, சுற்றுவட்டார கிராமங்களிலும் அவருடைய பெயர் இன்னும் ஒலித்துக்கொண்டிருக்கிறது. காரணம், பெரியாரிய கருத்தியலையொட்டி அவர் அங்கு ஆற்றிய கல்விப் பணிகள்.

திராவிட இயக்க லட்சியப் பயணத்தில் மானுட சமத்துவத்திற்கான மருந்தாக பெரியாரும், அண்ணாவும், கலைஞரும் ஏந்திய கல்வியை நயினார்பாளையத்தில் அனைத்துத் தரப்பு மக்களும் பெற்றிட, அதற்கான விழிப்புணர்வை ஊட்டிட தன் வாழ்நாளின் இறுதிவரை அக்கறை செலுத்தினார் அண்டிரன். கல்லூரி முடித்த பின்பு, 1970-களின் தொடக்கம் வரை தீவிர களப்பணியாளராக வலம் வந்த அண்டிரன், அடுத்து தமிழாசிரியராக பணியில் அமர்ந்தார். 33 ஆண்டுகாலம் தமிழாசிரியராகத் தொடர்ந்த அவரது கல்விச்சேவை, நயினார்பாளையத்தில் பலரையும் கரை சேர்த்தது.

...பயணிப்போம்.

## பெரியாரும் அவருடைய மரபும்... கலந்துரையாடல்!



தமிழ்நாட்டின் அரசியல் பண்பாட்டு வரலாறு, தந்தை பெரியார் பெயரின்றி முழுமைபெறாது. பெரியாருக்கு முன்னர், சமூக சீர்திருத்தம் பேசிய அனைவரும், இறைநம்பிக்கை கொண்டவர்களாகவும் இருந்தனர். அதனால், ஆரிய – பார்ப்பனப் புரட்டு உருவாக்கி வைத்திருந்த கடவுள் நம்பிக்கை, சமூக மாற்றத்துக்கு எதிராக நின்றது. அந்த சூழ்ச்சியைத் துணிச்சலாக முறியடித்தவர் பெரியார் ஒருவர்தான். அவர் முன்வைத்த கடவுள் மறுப்பும், சமூக சீர்திருத்தமுமே தமிழ்நாட்டைத் தலைநிமிர வைத்தன.

அந்த வரலாற்றினை ஆங்கிலத்தில் கொண்டு செல்லும் வகையில், தமிழ் வரலாற்று ஆய்வாளர், பேராசிரியர் ஆ.இரா. வேங்கடாசலபதி மற்றும் கார்த்திக்ராம் மனோகரன் ஆகியோர் தொகுத்த ‘The Cambridge Companion to Periyar’ நூலை, இங்கிலாந்தில் புகழ்பெற்ற கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகப் பதிப்பகம் வெளியிட்டது. கடந்த செப்டம்பர் மாதம், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இங்கிலாந்து பயணத்தின்போது வெளியிடப்பட்ட, இந்த நூல் குறித்த கலந்துரையாடல் இன்று (26.12.2025) நடைபெறுகிறது. பேராசிரியர் ஆ.இரா.வேங்கடாசலபதி அவர்களுடன், அகமது நதீம், கௌதம் ராஜ் ஆகியோர் விரிவாக உரையாட உள்ளனர்.

‘பெரியாரும் அவருடைய மரபும் – வரலாறு அளிக்கும் விமர்சனச் சிந்தனைகள்’ என்கிற தலைப்பில், ‘ஊடாட்டம் ஆய்வுக்குழு’ நடத்தும் இந்த கலந்துரையாடல், அண்ணா நூற்றாண்டு நூலகம் இரண்டாவது தளத்தில் மாலை 5.45 மணிக்கு தொடங்கும். வாய்ப்புள்ளோரை வரவேற்கிறது ஊடாட்டம் ஆய்வுக்குழு.

## ஃப்ளாஷ்பேக்



### இசைமுரசு அவர்களோடு சிறுவனாக...



எஸ்.வி.எஸ். சாகுல் ஹமீது

இசைமுரசு நாகூர் ஹனிபாவும் என் தந்தையார் எஸ்.வி.சக்கரை மைதீனும் உற்றத் தோழர்கள். அவர்களிடையே நடைபெறும் நகைச்சுவை கலந்த பேச்சு, அதை உறுதி செய்யும். மேற்கு மண்டலம் பகுதிக்கு எப்போது இசை நிகழ்ச்சிக்கு வந்தாலும், எங்கள் வீட்டில் தங்கித்தான் நிகழ்ச்சிக்குப் போவார். என் தந்தையார் நிகழ்ச்சியை ஒருங்கிணைப்பு செய்வார். இசைமுரசு வீட்டுக்கு வருகிறார் என்ற தகவல் பரவினால் போதும், வீடு முழுக்க கூட்டம் கூடிவிடும். அப்படி ஒரு சமயம் நானும் என் தங்கையும் கழகத்தினருடன் எடுக்கப்பட்ட புகைப்படம். இசைமுரசு அவர்கள் நூற்றாண்டில் இதைப் பகிர்வதில் மகிழ்கிறேன்.

– எஸ்.வி.எஸ்.சாகுல் ஹமீது, அனுமந்தபுரம்,
கழகத் தொண்டர் அணித் தலைவர், திருப்பூர் கிழக்கு.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

91

"கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்..."



# நேரடி மறைமுக அடிமைகள்... வீழ்த்தும் மக்கள் சக்தி!

***தி.மு.க.வை தீயசக்தி என்று சொல்பவர்கள் யார்? அவர்களின் நோக்கம் என்ன?***

தி.மு.க. என்பது, ‘எல்லாருக்கும் எல்லாம்’ என்கிற சமூக நீதியைக் கொள்கையாகக் கொண்ட இயக்கம். திருவள்ளுவர் சொன்ன, ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்பதை உயிர்மூச்சாகக் கொண்டு, நீதிக்கட்சி-திராவிடர் கழகம் ஆகியவற்றின் வழியில், முக்கால் நூற்றாண்டு காலமாக தி.மு.க. செயல்பட்டு வருகிறது. இந்தக் கொள்கையை ஆதரிப்பவர்கள் எப்போதும் தி.மு.க. பக்கம் இருப்பார்கள். இந்தக் கொள்கை என்ன என்று அறியாத தற்குறிகளும், ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்பதற்கு எதிரான, பிறப்பின் அடிப்படையில் மனிதர்களுக்கு சாதி முத்திரை குத்தி-இவர்கள் உயர்ந்தவர்கள்-இவர்கள் தாழ்ந்தவர்கள் என்று சனாதன வர்ணாசிரமம் அடிப்படையில், மனிதர்களிடையே பிளவை உண்டாக்குபவர்களும், அவர்களின் அடிமைகளும் தி.மு.க.வை தீயசக்தி என்பார்கள்.

தி.மு.க.வை மட்டுமல்ல, நீதிக்கட்சி என்கிற தென்னிந்திய நல உரிமைச் சங்கம் தொடங்கப்பட்டபோதே, வகுப்புவாதிகள்-பிளவுவாதிகள்-தீய சிந்தனை கொண்டவர்கள் என்று விமர்சித்தவர்களின் நேரடி-மறைமுக அடிமைகள்தான் இப்போது தி.மு.க.வையும் விமர்சிக்கிறார்கள். அவர்களின் பின்னால் ஆரியப் பாம்பு படம் எடுத்து நிற்கும். தி.மு.க.வை விமர்சிக்காவிட்டால், தனது அடிமைகள்-தற்குறிகள் தலையிலேயே அந்தப் பாம்பு கொத்தும். அதற்குப் பயந்துகொண்டுதான் தி.மு.க.வைப் பற்றி நாக்கில் நரம்பின்றிப் பேசுகிறார்கள்.

இதில் தி.மு.க.வின் சமூக நீதிக் கொள்கையால் வாழ்வில் உயர்ந்தவர்களும், தி.மு.க.வின் திட்டங்களால் நன்மை பெற்றவர்களும் இருப்பார்கள். அதைக்கண்டு கழகத்தினர் ஒரு போதும் அதிர்ச்சியடைய மாட்டார்கள். ஏனென்றால், தாங்கள் அடிமையாக இருப்பதையே ஆயிரமாயிரம் ஆண்டுகளாக அறியாமல் இருந்த மக்களுக்கு சுயமரியாதை உணர்வை ஊட்டி, சமூக நீதியை நிலைநாட்டியது தான் திராவிட இயக்கம். அதனால்தான், தி.மு.க.வை எதிர்ப்பதற்கு கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாக வந்து போனவர்களை எதிர்க்கொண்டு, இந்த இயக்கம் நிலைத்திருக்கிறது.

புதிதாக முளைக்கும் நச்சுக் கொடுக்குகளையும் தி.மு.க.வின் இளைய தலைமுறை, உடனடியாக அடையாளம் கண்டு மக்களிடம் அம்பலப்படுத்தி விடும். அந்த வலிமை தி.மு.க. தலைமைக்கு மட்டுமல்ல, தி.மு.க.வின் கடைக்கோடித் தொண்டனுக்கும் உண்டு.

திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாடு பொருளாதார வளர்ச்சியில் இந்தியாவில் முதன்மை மாநிலமாக இருக்கிறது. பெண்களுக்குப் பாதுகாப்பு மிகுந்த மாநிலமாகவும், பெண்கள் அதிகளவில் பணியாற்றக்கூடிய மாநிலமாகவும், பெண்களுக்கு சொத்துரிமை தொடங்கி, வேலைவாய்ப்பு மற்றும் முன்னேற்றத்திற்கான திட்டங்களை வழங்கியுள்ள மாநிலமாகத் திகழ்கிறது. கல்வி, சுகாதாரம் போன்றவற்றில் சிறந்த கட்டமைப்பைக் கொண்டுள்ளது. எல்லாவற்றுக்கும் மேலாக, இந்தியாவில் மதநல்லிணக்க மாநிலமாகத் திகழ்வது திராவிட மாடல் அரசின் தமிழ்நாடுதான். தி.மு.க.வை தீயசக்தி என்று விமர்சித்து, புதிதாகக் கிளம்பியுள்ளவர்கள் நடத்திய கூட்டத்திலேயே, ஆற்காடு நவாப் குடும்பத்தின் இளவரசர் வெளிப்படையாக இதனைப் போட்டு உடைத்துவிட்டார். இந்த ‘பஞ்ச்’. தி.மு.க.வை எதிர்த்துக் கிளம்புகிறவர்கள் யாராக இருந்தாலும், அவர்களை ‘நாக்அவுட்’ ஆக்கிவிடும்.

...வினா தொடரும்.

## கருவூலம்

### தி.மு.க. வெற்றி உறுதி!

1966-ஆம் ஆண்டு சென்னை விருகம்பாக்கத்தில் நடைபெற்ற கழகத்தின் நான்காவது மாநில மாநாடு குறித்து, பத்திரிகைகள் வியந்து எழுதின. ‘தி.மு.க.வின் செல்வாக்கு எவ்வளவு என்பது குறித்து ஓட்டுப் பெட்டிகள்தான் தீர்ப்பளிக்க முடியும். ஆனால், ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்களை மாத்திரம் வைத்துக்கொண்டு, தீர்ப்பளிக்க முடியுமென்றால், நகரில் தி.மு.க. வெற்றி பெற்றுவிட்டது என்று சொல்லி விடலாம்’ என கணிப்பினை வெளியிட்டன.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131